# 2021 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. எஸ். அருள் செல்வன், B.SC.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

நகராட்சிக்கு சொந்தமான செல்வராசு பேருந்து நிலையத்தின் கீழ்புறம் சுற்றுச்சுவருக்கு பின்புறம் திரு. K.R. சரவணன் என்பவர் கட்டிடம் கட்டியுள்ளார் அதற்கு ஏற்கெனவே அணுகு சாலை உள்ள நிலையில் சட்டத்திற்கு புறம்பாக பேருந்து நிலைய மதில் சுவரை இடித்து வழி ஏற்படுத்திக் கொண்டார். இந்நிலையில் 20.04.2021ல் நகராட்சியின் மூலம் இடிக்கப்பட்ட மதில் சுவரை கட்டி முடிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து திரு. K.R. சரவணன் என்பவர் தனது கட்டிடத்திற்கு பேருந்து நிலையத்தை நோக்கி அணுகு வழி அமைக்க கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். W.P.No. 11427/2021 ஆகும். இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வாதிட டாக்டர். எஸ். சூரியா, வழக்கறிஞர் அவர்களை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கின் வழக்கறிஞர் ஊதியமாக ரூ. 15000/– வழங்க கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையை வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 2977/2021/எப்1)

## பொருள் எண். 2.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பூதாமூர் கிராமம் வார்டு –F , பிளாக் எண்–18, நகரளவு எண் நகரளவு எண் 3/2 மற்றும் பிளாக் எண்–19, நகரளவு எண் நகரளவு எண் 55,56/1 ஆகியவற்றில் 0.92 ஏக்கர் அல்லது 40075.20 சதுரஅடி பரப்பளவு கொண்ட "ஸ்ரீ வெங்கடேஸ்வரா கார்டன்" மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். 368/2018 (R) என எண்ணிட்டு நாள். 14.08.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு.எஸ்.சாமிதுரை என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா – 1626.80 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 905, நாள். 04.03.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 2731/2020/எப்1)

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பூதாமூர் கிராமம் ரீசர்வே எண் 98/6,98/7 ஆகியவற்றில் 1.05 ஏக்கர் அல்லது 45738.00 சதுரஅடி பரப்பளவு கொண்ட "ஸ்ரீ ராமஜெயம் நகர்" மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R1195/2018 என எண்ணிட்டு நாள். 17.10.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு.கே.குணசேகர் என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா – 1345.00 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண்.2772, நாள். 03.08.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.3809/2021/எப்1)

__பொருள் எண். 4.__

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பூதாமூர் கிராமம் வார்டு –F , பிளாக் எண்–32, நகரளவு எண் நகரளவு எண் 18/2,19/1 (பழைய சர்வே எண்–87/1, 87/2, 87/4, 87/5, 97/1 ) ஆகியவற்றில் 2.85 ஏக்கர் அல்லது 124146.00 சதுரஅடி பரப்பளவு கொண்ட “அன்னை கஸ்தூரி அம்மாள் நகர்” மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (UD(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017ன்படி மேற்படி மனைபிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் மண்டலம் அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். R 1196 என எண்ணிட்டு நாள். 17.10.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திருமதி.எஸ். பேபி என்பவர் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா I – 1679.30, பூங்கா II – 1946.73, பூங்கா III – 1377.93, ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 2677, நாள். 28.07.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பூங்கா ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 3767/2021/எப்1)

**<u>பொருள் எண். 5.</u>**

விருத்தாசலம் நகராட்சி பகுதிகளில் அனுமதியில்லாமல் அமைக்கப்பட்டு 20.10.16க்கு முன் முழுவதும் விற்கப்பட்ட அனுமதியற்ற மனை பிரிவுகளை அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 04.05.2017, அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 13193/2017/எல் ஏ1, நாள். 27.03.2018ன்படி SPFW. No. 1, 2021/க.மா, நாள். 29.03.2021 ல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களால் கீழ்காணும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை பொது உபயோகங்களுக்காக பொது சாலையாக நகர் மன்றம் உரிய தீர்மானம் இயற்றி எடுத்துக்கொண்டு அதன் பிறகு விற்கப்பட்ட தனி மனைகளை வரன்முறை செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாலைகளை எடுத்துக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**மனைப்பிரிவு விபரம்:**

| வ.எண். | மனைபிரிவின் பெயர் | கிராமத்தின் பெயர் மற்றும் சர்வே எண் | நகர் ஊரமைப்பு அனுமதி உத்தரவு எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| 1. | பெயரிடப்படாத நகர் | கண்டியங்குப்பம் (16/1,16/2) | SPFW. No. 1, 2021/க.மா, நாள். 29.03.2021. |

மேற்கண்ட மனைப்பிரிவில் அமையும் சாலை எண். 1, கீழ்மேல் 196.50 அடி தென் வடல் 18 அடி, சாலை எண். 2, கீழ்மேல் 186 அடி தென் வடல் 18 அடி ,சாலை எண். 3, கீழ்மேல் 184 அடி தென் வடல் 18 அடி, சாலை எண். 4 கீழ்மேல் 81 அடி தென் வடல் 18 அடி ஆகிய சாலைகளை மன்றம் பொது சாலையாக அங்கீகரிக்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்கவும், அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்கவும் மேற்படி மனை பிரிவில் அமையும் சாலைகளை பொது சாலையாக ஏற்று அறிவிக்கலாம்.

(ந.க.எண். 2349/17/எப்1)

**<u>பொருள் எண். 6.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட விருத்தாசலம் கிராமம் வார்டு E பிளாக் எண் 50 நகரளவு எண் 9/1,9/2ல் 1.03 ஏக்கர் அல்லது 4150.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.06.2004 மற்றும் அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD(3) துறை, நாள். 04.05.2017 களின்படி அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020 மற்றும் அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD(3), நாள். 23.09.2020 மற்றும் அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD(4), நாள். 09.12.2020 மற்றும் அரசு கடிதம் எண். 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 03.08.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1, நாள். 08.09.2017 மற்றும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் மாவட்டம் அவர்களின் ம.வ/ந.ஊ.உ.இ எண். 15/2021 என எண்ணிட்டு நாள். 25.03.2021ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு.V.விஷ்வேஷ்வரன் மற்றும் இருவர்கள் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கு ஈடான மதிப்பு தொகை ரூ.354000/– செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 645, நாள். 19.02.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.746/2021/எப்1)

**<u>பொருள் எண். 7.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணலூர் கிராமம் வார்டு.B பிளாக் எண் 4 நகரளவு எண் 17/44ல் 0.50 ஏக்கர் அல்லது 2026.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.06.2004 மற்றும் அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD(3) துறை, நாள். 04.05.2017 களின்படி அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020 மற்றும் அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD(3), நாள். 23.09.2020 மற்றும் அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை (UD(4), நாள். 09.12.2020 மற்றும் அரசு கடிதம் எண். 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 03.08.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1, நாள். 08.09.2017 மற்றும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் மாவட்டம் அவர்களின் ம.வ/ந.ஊ.உ.இ எண். 42/2021 என எண்ணிட்டு நாள். 06.07.2021ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைபிரிவு உரிமையாளரான திரு.R.ரமேஷ் மற்றும் R. திலகம் என்பவர்கள் மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கு ஈடான மதிப்பு தொகை ரூ.128000/– செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை தானப்பத்திர எண். 2167, நாள். 24.06.2021ன் மூலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் சாலை ஆகிய பொது உபயோக இடங்களை மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொது உபயோக இடங்களை மனுதாரர் தானப்பத்திரத்தின் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளதால் மன்றம் ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1903/2021/எப்1)

**<u>பொருள் எண். 8.</u>**

விருத்தாசலம் நகராட்சியின் 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 3228/2020/சி1)

## பொருள் எண். 9

இந்நகராட்சிக்குட்பட்ட கண்டியங்குப்பம் கிராமம், ரீ. சர்வே எண்கள் 101/1, 101/2, 101/9, 101/10, 101/11, 101/8A2A. நகரளவை வார்டு–டி, பிளாக் எண். 23, நகரளவை எண்கள். 3/1, 3/2, 3/3, 3/16ல் 2.14 1/2 ஏக்கர் பரப்பளவு கொண்ட தனக்கு சொந்தமான இடத்தில் குடியிருப்பு மனைபிரிவு அமைப்பதற்கு ஏதுவாக நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முழுமைத்திட்டத்தில் விவசாய பயன்பாட்டு பகுதியாக உள்ளதை குடியிருப்பு உபயோக பயன்பாட்டு பகுதியாக உள்ளதை குடியிருப்பு உபயோக பயன்பாட்டு பகுதியாக மாற்றம் செய்து வழங்க மனுதாரர் திரு. ஆர். ரமேஷ் என்பவர் கோரியுள்ளார். நகர்மன்றம் இதனை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:** நிலப்பயன் மாற்றம் கோரியுள்ள இடத்திற்கு அருகில் தற்போது குடியிருப்புகள் அதிகளவில் ஏற்பட்டு அபிவிருத்தி அடைந்துள்ளது. இதில் விவசாய நடவடிக்கைகள் ஏதும் இல்லை எனவே நிலப்பயன் மாற்றம் செய்ய பரிந்துரை செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3766/2021/எப்1)

## பொருள் எண். 10.

இந்நகராட்சிக்கு எதிராக திரு. கே. பால்ராஜ் த/பெ. கிருஷ்ணசாமி, கணக்கர்(ஓய்வு) அவர்கள் பட்டுக்கோட்டை நகராட்சியில் இறுதியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். அன்னார் இந்நகராட்சியில் வருவாய் ஆய்வராக பணிபுரிந்ததற்கான தடையில்லா சான்று கோரியது குறித்து நிலுவை தொகை தெரிவிக்கப்பட்டது. மேற்படி அன்னாருக்கு அனைத்து நகராட்சிகளிலும் பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகையினை அன்னாரின் ஓய்வுகாலி பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்டது அதனை எதிர்த்து அன்னார் W.P.No. 15204/2008ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து தீர்ப்பின் அடிப்படையில் அன்னார் பட்டுக்கோட்டை நகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்ட தொகையை வட்டியுடன் திரும்ப வழங்க கோரி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண். 708/2021 சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி தொகை பட்டுக்கோட்டை நகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்டு அந்நகராட்சியாலேயே வட்டியுடன் திரும்ப வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கிற்கும் இந்நகராட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததாலும் தொகை அன்னார் திரும்ப பெற்றுக்கொண்டதாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் தெரிவித்து வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகியதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– ஐ வழங்க கோரி வழக்கறிஞர் திரு. சி. செல்வராஜ், சென்னை உயர்நீதி மன்றம் அவர்கள் கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.7168/2006/சி1)

**பொருள் எண். 11.**

விருத்தாசலம் நகராட்சியின் 33 வார்டுகளில் கொரானோ Covid-19 தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக மாவட்ட ஆட்சிதலைவர் உத்தரவின் பேரில் வீடு வீடுடாக சென்று காய்ச்சல் சலி உடல் வெப்ப நிலை மற்றும் உடல் ஆக்சிஜன் அளவு கண்டரிய Infra Red Thermometer மற்றும் Pulse Oximeter ஆகியற்றிற்கு DURA CELL CHHOTA POWER பேட்ரி ரூ4000 /–ற்கு சுகாதார ஆய்வளாரால் வாங்கப்பட்டது . செலவிடப்பட்ட தொகையின் ரசீது நகல் சமர்பிக்கப்பட்டுள்ளது.எனவே செலவு செய்த தொகை ரூ Rs 4000/- ஐ வழங்க அனுமதியும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3493 /2021/எச்1

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு 33 வார்டுகளில் அனைத்து பகுதிகளில் கொரோனா covid-19 , 2 வது அலை மிக வேகமாக பரவி வருவதால் நோய் பரவா வண்ணம் தொடர்ந்து 33 வார்டுகளுக்கும், கிருமி நாசினி தெளிப்பதற்காக, பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு நீர் கை இருப்பு குறைவாக உள்ளது என சுகாதாரஆய்வர் மற்றும் சுகாதாரஅலுவலர் 05.06.2021 ல் குறிப்பு கொடுத்துள்ளனர். 2021 ஆம் ஆண்டிற்கு பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு நீர் வாங்க பொது சுகாதார பணி நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் சப்ளை செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ 8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணி அத்தியாவசியம் மற்றும் அவசர அவசிய கருதி மேற்படி பணி மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.3558/2021/எச்1

**<u>பொருள் எண். 13.</u>**

விருத்தாசலம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN-31-AL-1135 வாகனத்தில் வேக்கம் கட்டை வீல் பிரேக்கிங் டேம்பரேசர் ஒர்க் ஆகியவை பழுதாகி விட்டது எனவும் பொது சுகாதார பணி என்பதால் , பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ஓட்டுனரே செலவினத்தை மேற்கொண்டுள்ளார். ஓட்டுனரால் செலவிடப்பட்ட தொகையின் ரசீது நகல் சமர்பிக்கப்பட்டுள்ளது.எனவே செலவு செய்த தொகை ரூ 3800/—ஐ வழங்க அனுமதியும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3179/2021/எச்1

**பொருள் எண். 14.**

நகராட்சிக்குட்பட்ட புதுப்பேட்டை டாக்டர் லூக்காஸ் தெருவில் திருமதி. பிரேமா க/பெ. கிருஷ்ணசாமி என்பவர் திரு. முருகன் த/பெ. பழமலை என்பவருக்கு எதிராக மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் கடலூர் (இருப்பு, விருத்தாசலத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண். 345/2011ன் மேல்முறையீட்டு வழக்கு எண். 71/2019ல் வாதிக்கும் பிரதிவாதிக்கும் உள்ள வழிதட உரிமை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் நகராட்சியை இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு நடைபெற்று வந்த நிலையில் மேல்முறையீட்டு வழக்கானது எந்த தீர்ப்பும் இன்றி தள்ளுபடி செய்யப்பட்டது.

எனவே இவ்வழக்கில் நகராட்சி சார்பில் முன்னிலை ஆகி நடத்தி கொடுத்ததற்காக நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு. ஜி. பாலசந்திரன் அவர்கள் கடிதம் வழங்கியதற்கிணங்க, வழக்கறிஞர் கட்டணம் ரூ. 11000/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.
   (ந.க.எண். 3607/2021/எப்1)

**பொருள் எண். 15.**

நகராட்சிக்குட்பட்ட 11வயலூர் கிராமத்தில் வசிக்கும் திரு. தனபால் த/பெ. மாணிக்கம் மேற்கு தெரு, வயலூர் என்பவர் நகராட்சிக்கு எதிராக விருத்தாசலம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண். 259.2015ல் நகராட்சி தார்சாலை அமைக்கப்பட்டது தொடர்பாக தனக்கு உரிமையுள்ளது என கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கில் விசாரணையின்போது மனுதாரர் முன்னிலை ஆகாததால் நகராட்சிக்கு சாதகமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகிய நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு. ஜி. பாலசந்திரன் அவர்களுக்கான வழக்கறிஞர் கட்டணத் தொகை ரூ. 4000/– ஐ வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகையை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

   (ந.க.எண். 3606/2021/எப்1)